

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.7.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், முதன்மைச் செயலாளர் – நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் சந்தித்து, விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதையொட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.7.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, இ.பரந்தாமன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத் தலைவர் துறைமுகம் காஜா, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் எஸ். ஆஸ்டின் மற்றும் கழக நிர்வாகிகள் சந்தித்து, விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதையொட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.

### “சாதிய, மதவெறி சக்திகளுக்கு அரசியல் தளத்தில் இடமில்லை” என

# விக்கிரவாண்டி மக்கள் நெற்றியடி தீர்ப்பு!

## இரா.முத்தரசன் அறிக்கை !



சென்னை, ஜூலை 14-

விக்கிரவாண்டியில் கழகத்தின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், “சாதிய, மதவெறி சக்திகளுக்கு அரசியல் தளத்தில் இடமில்லை” என்பதை விக்கிரவாண்டி மக்கள் நெற்றியடி தீர்ப்பாக வழங்கியுள்ளார்கள்” என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் சாதிய, மதவெறி சக்திகளை முற்றாக நிராகரித்து, திமுகழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை மகத்தான வெற்றி பெறச் செய்துள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் அடைந்த தோல்வியால் நிலை குலைந்து போன அ.இ.அ.தி.மு.க. தேர்தல் களம் இறங்கவில்லை. இந்த நிலையில் பா.ம.க. அ.இ.அ.தி.மு.க. வாக்குகளை பெறலாம் என்ற ஆசையுடன் அலைந்தது. ஆனால், தமிழ்நாட்டில் சாதிய, மதவெறி சக்திகளுக்கு அரசியல் தளத்தில் இடமில்லை என்பதை விக்கிரவாண்டி மக்கள் நெற்றியடி தீர்ப்பாக வழங்கியுள்ளனர்.

கடந்த 2021 முதல் தமிழக மக்களின் உணர்வுகளை உள்வாங்கி நலத் திட்டங்களையும், இளைய தலைமுறையினரின் திறனை வளர்க்கும் ஊக்கம் தரும் திட்டங்களையும் செயல்படுத்தி வருவதுடன், வகுப்புவாத, பாசிச ஜனநாயக விரோத சக்திகளை எதிர்த்துப் போராடி வரும் கொள்கை உறுதி கொண்ட தி.மு.கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை வலுப்படுத்தும் வகையில் மக்கள் தீர்ப்பு அமைந்துள்ளது.

கள்ளக்குறிச்சி கருணாபுரம் விஷச் சாராய சாவுகளைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேடிய மலிவான செயலை மக்கள் புறக்கணித்துள்ளனர்.

சார்பற்ற நடுநிலை நீதி பரிபாலன முறைக்கு எதிராக பா.ஜ.க. அமலாக்க முயற்சிக்கும் மூன்று குற்றவியல் சட்டங்களையும், மாணவர் சமூகத்தின் மருத்துவக் கல்வி கனவை சிதைத்து வரும் நீட் தேர்வில் நடந்த ஊழல், முறைகேடுகளை எதிர்த்து நீட் தேர்வு முறையில் தமிழ்நாட்டுக்கு விதிவிலக்கு கோரி வருவதையும் ஆதரித்து தமிழ்நாடு ஒன்றுபட்டு நிற்கிறது என்கிற உணர்வை வெளிப்படுத்தும் வகையில் இடைத்தேர்தல் வழியாக வெளிப்படுத்திய விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி மக்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு நன்றி பாராட்டி, வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### உலகிற்கே முன்னோடியான “முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்”

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - நாளை கடம்பத்தூரில் தொடங்கி வைக்கிறார்!

## தமிழ்நாடு முழுவதும் அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளிகளில் விரிவுபடுத்தப்படுகிறது!

சென்னை, ஜூலை 14 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தமிழ்நாட்டில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 15.9.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, 1,545 பள்ளிகளைச் சேர்ந்த 1 இலட்சத்து 14 ஆயிரம் குழந்தைகள் பயன்பெற்றனர்.

இத்திட்டத்திற்கு மக்களிடையே ஏற்பட்ட வரவேற்பினையும், மாணவ மாணவியர் இடையே ஏற்பட்ட எழுச்சியினையும் கருத்தில் கொண்டு 25.8.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊராகிய திருக்குவளையில் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, 30 ஆயிரத்து 992 அரசுத் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 18 இலட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் காலை உணவைச் சூடாகவும் சுவையாகவும் உண்டு மகிழ்ச்சியோடு பள்ளிப் பாடங்களில் கவனம் செலுத்திப் படித்து வருகிறார்கள்.

இந்நிலையில், இந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் இத்திட்டம் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 15,7.2024 அன்று பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளில், திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், கீழச்சேரி கிராமத்தில் உள்ள புனித அன்னாள் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசின் சார்பில் தொடங்கி வைக்கிறார்கள்.

இத்திட்டத்தின் மூலம் உள்ள 3,995 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 2 இலட்சத்து 23 ஆயிரத்து 536 குழந்தைகள் பயனடைவார்கள்.

முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் உலகிற்கே முன்னோடியான திட்டமாகத் திகழ்கிறது.

இந்த விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் மாவட்ட நிர்வாகம் இவ்விழாவிற்கான முன்னேற்பாடுகளைச் சிறப்பாகச் செய்து வருகிறது.

### 122–ஆவது பிறந்த நாள்! கடம்பத்தூர் ஒன்றியம் கீழச்சேரியில்

# பெருந்தலைவர் காமராஜர் திருவுருவச் சிலைக்கு மாலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அணிவித்து மரியாதை செலுத்துகிறார்!

சென்னை, ஜூலை 14 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 122வது பிறந்த நாள் மற்றும் கல்வி வளர்ச்சி நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் 15.7.2024 அன்று காலை 8.15 மணியளவில் திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கீழ்ச்சேரி, அரசு உதவி பெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் விருதுநகரில் குமாரசாமி – சிவகாமி தம்பதியினருக்கு 15.7.1903 அன்று மகனாகப் பிறந்தார். காங்கிரஸ் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் அறிமுகத்தால் 1919 ஆம் ஆண்டு காங்கிரஸ் இயக்கத்தில் இணைந்து பல்வேறு சுதந்திரப் போராட்டங்களில் பங்கேற்றார். இதன் தொடர்ச்சியாக, 1930 ஆம் ஆண்டு நடைபெற்ற உப்புச் சத்தியாகிரக போராட்டத்தில் பங்கேற்றுச் சிறை சென்ற பின் அரசியல் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் 1936 ஆம் ஆண்டு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் செயலாளராகவும், 1937 மற்றும் 1946 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தல்களில் வெற்றி பெற்று, சட்டமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்தார். முன்னதாக 1941 ஆம் ஆண்டில் விருதுநகர் நகர்மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1952 ஆம் ஆண்டு விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாட்டு மக்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வந்தார். இவற்றைத் தொடர்ந்து, 1954ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சராக பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதன் முதலில் பொறுப்பேற்றார்.

தம்முடைய அயராத உழைப்பினால் சிகரம் தொட்ட கர்மவீரர் காமராஜர் அவர்கள், தமது 9 ஆண்டு கால ஆட்சியில் தமிழ்நாட்டில் பள்ளிகள் இல்லாத ஊரே இருக்கக்கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தில் கிராமங்கள் தோறும் தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கி வைத்து கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டார். ஏழை மாணவர்கள் பள்ளிகளில் கல்வி கற்பதற்கு ஏதுவாக, இலவச மதிய உணவுத் திட்டத்தினைக் கொண்டு வந்தார். அதன் மூலம் கல்விக் கண் திறந்த காமராஜர் என இன்றும் போற்றப்படுகிறார். ஆவடி டாங்கி தொழிற்சாலை, திருவெறும்பூர் துப்பாக்கித் தொழிற்சாலை, பாய்லர் தொழிற்சாலை உள்ளிட்ட பல தொழிற்சாலைகளை ஏற்படுத்தினார்.

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் அணைகளைக் கட்டி விவசாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். மேலும் பல்வேறு திட்டங்கள் வாயிலாக அனைத்துத் துறைகளையும் வளர்ச்சியடையச் செய்தார்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் வாழ்ந்த காலத்தில் வாய்மை, நேர்மை, எளிமை, தூய்மை ஆகியவற்றுக்கு உதாரணமாகத் திகழ்ந்தார். அவர் மறைவுக்குப் பின்னர், 1976ஆம் ஆண்டு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கிப் போற்றப்பட்டார். அவர் பெருமைகள் போற்றி நினைவு அஞ்சல் தலையும் வெளியிடப்பட்டது.

1959 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக சென்னை மாநகராட்சியை முதன் முதலில் கைப்பற்றிய பிறகு தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஆற்றிய அரும்பணிகளைப் போற்றி பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவச் சிலையை சென்னை மாநகரில் நிறுவிட முடிவு செய்தது. அதன்படி, சென்னை மாநகராட்சி சார்பாக அண்ணா சாலையில் பல்லவன் இல்லத்திற்கு எதிரில் அமைக்கப்பட்ட பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவச் சிலையை 9.10.1961 அன்று, பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் திறந்துவைத்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15 ஆம் நாளினை “கல்வி வளர்ச்சி நாளாக” அறிவித்து சட்டம் இயற்றினார்கள். ஆண்டுதோறும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான்று பள்ளிகளில் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

மேலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் சென்னையிலுள்ள கடற்கரை சாலைக்கு ‘காமராஜர் சாலை’ என்றும், சென்னை விமான நிலையத்தின் உள்நாட்டு முனையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெயர் சூட்டப்பட்டது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு அரசின் சார்பில், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 122வது பிறந்த நாளான கல்வி வளர்ச்சி நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, அரசு உதவி பெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் அலங்கரிக்கப்பட்ட பெருந்தலைவர் காமராஜர் திருவுருவப் படத்திற்கு 15.7.2024 அன்று காலை 8.15 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

அதே நாளில், சென்னை, அண்ணா சாலை, பல்லவன் இல்லம் எதிரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு காலை 9.30 மணியளவில் அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செய்து சிறப்பிப்பார்கள்.